DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Fast Track Magistrate, Srivilliputtur.

STC.No. 886/2024

Deposition of Witness for P.W. 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | இசக்கிராஜ் | **தாலுகா** | : | |
| **த.பெ.** | : | ராஜேந்திரன் | **தொழில்** | : | |
| **ஊர்** | : | | **வயது** | : | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 27.02.2026

புகார்தாரர் ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர்.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் முந்தைய விசாரணை தேதியில் எதிரியின் வங்கி கணக்கு விண்ணப்பப் படிவம் எடுத்துவர கால அவகாசம் கோரியதின் பேரில் அதன் நகலை தாக்கல் செய்கிறேன். அது எங்கள் தலைமை அலுவலகத்தில் இருந்த மின்னஞ்சல் வழியாக கிடைத்தது. அது **எ.சா.ஆ.1** ஆகும். அசல் எங்கள் அலுவலகத்தில் இல்லை. எதிரியின் வங்கி கணக்கில் என்னென்ன கடன் பெறப்பட்டது என்ற விபரங்களை எங்கள் வங்கியில் உள்ள ஆவணங்களை சரிபார்த்து தெரிவிக்கலாம். வாடிக்கையாளரின் மொத்த கணக்கு பட்டியல் மற்றும் இதர ஆவணங்களை எடுத்து வந்தால் வாடிக்கையாளர் வங்கியில் செய்த அனைத்து பரிவர்த்தனைகள் தெரியவரும் என்றால் சரி. எ.சா.ஆ.1ல் காணப்படுவதுபோல் பு.சா.ஆ.2 காசோலையில் கையொப்பம் காணப்படவில்லை என்றால் சரி.

## புகார்தாரரின் தரப்பில் மறுவிசாரணை

எ.சா.ஆ.1 விண்ணப்பப் படிவத்தில் வங்கி கணக்கு எந்த தேதியில் துவங்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் 15.02.2008 அன்று அந்த விண்ணபத்தை வங்கியால் பரிசீலனை செய்யப்பட்டது. பு.சா.ஆ.2 காசோலையில் உள்ள கையொப்பம் வேறுபாடாக உள்ளது என திருப்பப்படவில்லை என்றால் சரி. வங்கி கணக்கு முடிக்கப்பட்டது என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டுள்ளது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

27/2/21

நீதித்துறை விரைவு நடுவர்
திருவில்லிபுத்தூர்.